# போஷாக்கு உணவு உற்பத்தியில் பெண்களுக்கு பயிற்சி

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 9
போன் 389 இதழ் 180
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 25 ஐ அவ். 3 வியாழக்கிழமை [10-8-67]

யாழ்ப்பாணம், வியாழன் திருநெல்வேலி கிருஷிகப் பண்ணையில் 100 பெண்கள் அதிகபோஷாக்கு உணவு உற்பத்தி விசேஷ பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு நேற்று முதல் பயிற்சியளிக்கப்பட்டுவருகின்றது.

திருநெல்வேலி பிரயோசப் போஷணைத்திட்ட வகுப்பில் பயிற்சிபெற்ற பின்னரே இவர்கள் இவ்விசேஷ பயிற்சிக்குத்தெரிவு செய்யப்பட்டார்கள். திருநெல்வேலியைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டு இதனை நடாத்துவது சம்பந்தமாக அண்மையில் யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற விவசாய மகாநாடொன்றில் திரு. லக்ஷ்மன் டி சில்வா தெரிவித்ததைத்தொடர்ந்தே இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இப்பயிற்சிக்காக திருநெல்வேலி, உரும்பராய், ஊரெழு, கோப்பாய் வடக்கு, கோப்பாய்தெற்கு, ஆகிய இடங்களிலிருந்து இந்தநூறு பேரும் தெரிவு செய்யப்பட்டார்கள். 14 நாட்கள் நடைபெறும் இவ்

[6-ம்பக்கம் பார்க்க]

# வெங்காயம் ஏற்றுமதி செய்வதில் இடையூறு

## விவசாயிகள் கவலை; அரசாங்கத்துக்கு புகார்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண மாவட்டத்தின் சில பகுதிகளில் உற்பத்திசெய்யப்படும் வெங்காயங்களை ஏற்றுமதிசெய்வதில் ஏற்பட்டுள்ள கஷ்டநிலையினால் இப்பகுதி வெங்காயங்கள் விற்பனைசெய்யமுடியாதிருப்பதோடு விவசாயிகளிடையே ஒரு வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக உடனடியாக தீவிர நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள புகாரொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உப உணவுப்பொருட்களை அதிகம் உற்பத்திசெய்து நாட்டில் நிலவும் உப உணவுத் தட்டுப்பாட்டை நிவிர்த்திசெய்ய, அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய விவசாயிகள் முழுமூச்சுடன் உப உணவுப் பண்டங்களை உற்பத்திபண்ணுவதில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில் இப்படியான கொள்வனவு, ஏற்றுமதிப் பிரச்னைகள் கமக்காரர்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுப்பதாக இருப்பதாக இப் புகாரில் விசேஷமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோண்டாவில்பகுதி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு, முற்றிய வெங்காயத்தை அறுவடைசெய்து பல நாட்களாகியும் கோண்டாவில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு உரியநேரத்தில் கொடுக்கமுடியாதிருப்பதாகவும், வடபகுதி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தினர் கோண்டாவில் பலநோக்குச்கூட்டுறவு சங்கத்திற்கு வெங்காயம் அனுப்புவதற்கு போதிய புகையிரதப் பெட்டிகளை கொடுக்காமலிருப்பதாகவும், இதனால் இப்பகுதி விவசாயிகள்வெங்காயத்தை உத்தரவாத விலைக்கு விற்க முடியாதிருப்பதாகவும் கோண்டாவில் கிழக்கு ஜன சமூக நிலையத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இப் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில தரகர்கள் இவ்வெங்காயங்களைக் குறைந்தவிலைக்கு விவசாயிகளிடமிருந்து பெற்றுகொள்ளைலாபமடிப்பதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெட்ரோல் ஆராய்ச்சி விரிவடைகிறது

### தகவல்கள் இரகசியமானவையாம்

உடுப்பிட்டி, புதன் வடபகுதியின் பல்வேறு பாகங்களிலும் கடந்த சில மாதங்களாகப் பெற்ரோல் எண்ணெய்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் பூகர்ப்பவியல் நிபுணர்கள் தற்பொழுது வல்லையிலும் அச்சுவேலியிலும் அதனை அடுத்துள்ள வளலாய் என்னுமிடத்திலும் ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர்.

பிரெஞ்சு நாட்டு நிபுணர்களின் உதவியுடன் இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனமும், நிலவியல் ஆராய்ச்சி நிலையமும் கூட்டாக நடாத்திவரும் எண்ணெய்வள, பூகர்ப்ப ஆராய்ச்சிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. துன்னாலை, கரணவாய்ப்பகுதியிலுள்ள உப்புவெளி, மண்டான் ஆகிய இடங்களில் இந்நிபுணர்கள் நிலத்தினடியில் டைனமைட் வெடிவைத்து அப்பொழுது நிலத்தின் கீழ் நிகழ்ந்த மாற்றங்களை மின்சாரத்தால் இயங்கும் ஒரு நுண்ணிய சக்திவாய்ந்த கமெரா விறுல் படம்பிடித்துச் சென்றுள்ளனர். இதுசம்பந்தமான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

வளலாய் என்னுமிடத்தில் பெட்ரோல் சுரக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றனவா என்று நமது நிருபர் ஒரு நிபுணரிடம் கேட்டபொழுது, இப்பொழுது சொல்லுவதற்கில்லையென்றும், ஆராய்ச்சி சம்பந்தமான தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேற்கொண்டு தகவல்கள் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## அமைதியை நிலைநாட்ட சமாதான மகாநாடு

### கரையூரில் இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா. கரையூர் பொலிஸ் பகுதியில், இரு சமூகத்தினருக்கு நடந்த சச்சரவைத்தொடர்ந்து, அப்பகுதியில் மீண்டும் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு. இன்று மாலை கரையூர் பொலிஸ் நிலையத்தில் ஒரு சமாதான மகாநாட்டை நடத்த பொலிஸார் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சமாதான மகாநாட்டில் இரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

மாநகர சபை யாழ். கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் நேற்றுக் காலை கலவரம் நடந்த இடத்திற்குச்சென்று, தொழிலாளர்களைச் சந்தித்து அமைதியாக இருக்கும்படியும், காடையர்களை உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கும்படியும் தெரிவித்தார்.

இன்று நடக்கும் மகாநாட்டில், விசேஷ கமிஷனரும், யாழ்ப்பாணம் பொலிஸாரும் கலந்துகொள்வர்.

## 4-ம் எதிரி விடுதலை

காலி, புதன் பத்மினி குலரத்தின கொலை வழக்கில் நாலாவது எதிரியான பணிப்பெண் சிசிலி இன்று விடுதலை செய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் இவ்வழக்கை சுப்பிறீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தினார்.

## வெடி விபத்தில் இளைஞர் பலி

யாழ்ப்பாணம், வியா அச்சுவேலி வடக்கில் நேற்று இரவு நடந்த வெடி விபத்திற்கு எஸ். அரியநாயகம் என்ற இளைஞர் பலியானார். இது சம்பந்தமாக பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## நகரசுத்தித் தொழிலாளர் இன்று வேலை செய்வர்

### பொலிஸ் பாதுகாப்பு அளிப்பதாக கமிஷனர் வாக்குறுதி

யாழ்ப்பாணம், வியாழன் கடந்த இரண்டு தினங்களாக வேலைநிறுத்தம்செய்து வரும் யாழ்ப்பாணம்மாநகர சபை நகரசுத்தித் தொழிலாளிகள் இன்று காலை வேலைக்குத் திரும்புவார்கள்.

பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதாக விசேஷ கமிஷனர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இக்கலவரத்தில் 21 நகரசுத்தித் தொழிலாளர்கள் காயமடைந்ததாகவும், ஒருவருக்கு பண்டை உடைந்ததாகவும், மற்றொரு தொழிலாளிக்கு கால் துண்டிக்கவேண்டியநிலையிலிருப்பதாகவும் தொழிலாளர் வேலைக்குவர அஞ்சுவதாகவும் கமிஷனர் மேலும் தெரிவித்தார்

இன்றுகாலைமுதல், பொலிசார் கலவரம் நடந்த இடங்களில் ரோந்து சுற்றுவார்கள். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த

[6-ம்பக்கம் பார்க்க]

## 'நகரசுத்திதொழிலாளருக்கு பாதுகாப்பு அளியுங்கள்'

### ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியா. 'மலசுத்தி சேவையைஆற்றும் பொருட்டு உங்கள் வீடுகளுக்கு வரும் மலசுத்தி ஊழியர்களது பாதுகாப்பு பொதுமக்களாகிய உங்கள் பொறுப்பு. ஆகவே நகரின் பொதுநலனையும், உங்கள் சொந்த நலனையும் முன்னிட்டு மலசுத்தி ஊழியர்கள் தம் கடமையைச் செய்யும் நேரத்தில் காடையர்கள் அவர்களைத் தாக்காது பார்த்துக் கொள்ளும்படி பொதுமக்களாகிய உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.'

யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பொதுமக்களுக்கு மேற்கண்டவாறு வேண்டுகோள்

[6-ம்பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

கலவரங்களை குறிப்பாக வகுப்புவாதக் கலவரங்களைச் சமாளிப்பதில் தங்களுடைய உயிரையும் அளிக்கக் கூடியவர்களைக் கொண்ட ஒரு சமாதானப் படையை அமைக்க வேண்டும். பொலிசார் ஏன் ராணுவத்தினருக்குப் பதிலாகக்கூட இப்படை பணியாற்ற வேண்டும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

பிலவங்க ஆடிமீ 25உ (10-8-67)

# பங்கிட்டு முறையில் பால் உணவு

பால்உணவுப்பொருள்களையும் பங்கீட்டு முறையில் விநியோகிக்கலாமென உணவு அமைச்சர் அரசாங்கத்துக்கு யோசனை தெரிவித்துள்ளாராம் தட்டுப்பாடான பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதித்து அவை எல்லாருக்கும் சமமாகக் கிடைக்க வழி செய்யத்தான் வேண்டும்.

டப்பாக்களில் அடைக்கப்பட்ட பால் உணவுப் பொருள்கள் பெருமளவு இறக்குமதிசெய்யப்பட்டபோதிலும் அவர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக உணவுஅமைச்சர் கூறுகிறார். இதனால்தான் பங்கீட்டு முறையில் இப்பொருள்களை விநியோகம் செய்யலாம் என அவர் யோசனை கூறுகிறார்.

பால் உணவுப் பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுவதில்லை. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும பால் உணவு அவசியம். இங்கு உற்பத்தி செய்யப்படாத பொருள்களின் இறக்குமதியை அவசரப்பட்டு நிறுத்துவதோ கட்டுப்படுத்துவதோ நல்லதல்ல இதனால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவர். இறக்குமதி செய்யப்பட்டாலும் பால் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறதென்றால் அது வேடிக்கையாக இருக்கிறது. நமது திறமையின்மையையும் இது எடுத்துக் காட்டுவதாகும். பங்கீட்டு முறையில் பால் உணவுப் பொருள்களை விநியோகம் செய்வது இப்போதுள்ள நிலையில் பலருக்கும் ஆறுதலளிக்கக்கூடியதே. ஆயினும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணத்தை ஆராய்ந்து அதைத் தடுப்பதற்கான வழிவகைகள் காணப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

இறக்குமதிக் கட்டுப்பாடு மட்டுமல்லாது விநியோக முறை சீராக இல்லாததே இங்கு பல பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவும் சிலர் கொள்ளை லாபம் அடிக்கவும் வாய்ப்பேற்படுகிறது.

பங்கீட்டு முறையும் சரிவர இயங்கக்கூடியதாக இருக்க வேண்டும். எனினும் கட்டுப்பாடும் பங்கீட்டு முறையும் உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டையே எடுத்துக் காட்டும். இது நீடிப்பது நல்லதல்ல.

# ஹென்றிக் இப்ஸன் உலகம் போற்றும் நாடகாசிரியர்

(தேவன் — யாழ்ப்பாணம்)

11, 12, 13ந் திகதிகளில் வேம்படி றிம்மர் மண்டபத்தில் பிரதேசக் கலை மன்றத் தயாரிப்பாக மேடையேறும் 'பெண் பாவை' என்னும் நாடகத்தின் தமிழ் வடிவத்துக்கு திரு. த. சண்முகசுந்தரத்துடன் கூட்டுப் பொறுப்பாளரும், உதவித் தயாரிப்பாளருமாகிய தேவன்-யாழ்ப்பாணம் இதே நாடகத்தை 'பத்தினியா பாவையா?' என்ற தலைப்பில் பல்லாண்டுகளுக்கு முன்னர் மேடையேற்றியபோது மூல நூலாசிரியரான ஹென்றிக் இப்சனை அறிமுகப்படுத்த எழுதி, ஈழகேசரியில் 20-12-53இலும், திராவிட நாட்டில் 29-12-53இலும் வெளிவந்த இக்கட்டுரையை இங்கு இன்று வெளியிடுகிறோம். திரு. த. சண்முகசுந்தரம் நாடகத்துக்கு சாகித்திய மண்டலப் பரிசும், திரு. இ. மகாதேவா [தேவன்-யாழ்ப்பாணம்] கலைக்கழகப் பரிசிலும் பெற்றவர்கள். 'பெண் பாவை' பற்றி தேவன்-யாழ்ப்பாணம் கூறுவதாவது:

''இதைத் தழுவல் என்று நாங்கள் கூறியபோதிலும் இதில் பெயர்கள் மாற்றம், பண்டிகைகள் மாற்றம், சில மிகச் சிறிய வெட்டுகள், ரறன்ரெல்லா நடனத்துக்குப் பதிலாக வீணை வாசிப்பு ஆகியவை தவிர மீதி வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்புத்தான்.''

''சாக்கடையைத் திறந்து விட்டார், அழுக்கு நாற்றம் நாசியை அடைக்கிறது.''

''ரணத்தைக் கீறிவிட்டார். சீழ் வடிகிறது. தாங்க முடியவில்லை—வலி மட்டுமல்ல— அருவருப்பும்கூட.''

இவையெல்லாம் ஹென்றிக் இப்ஸன் வாழ்ந்த காலத்தில் அவருடைய நாடகங்களைப் பார்த்தவர்கள் போட்ட கூச்சல். பிடிக்காத சமூக ஊழல்கள் அம்பலமானதும் கொக்கரிக்க ஆரம்பித்தார்கள் மக்கள். அவற்றை மூடி மறைத்து மயில், குயில், மலர், வனம் என எழுதிக் குவித்தவர்கள் மத்தியில் புதுமைக் கவிஞராய் இப்பஸன் புராணங்களையும் கனவுகளையும் ஒதுக்கிவிட்டுத் தனிவழி போனார். தம்மைச் சுற்றி உள்ளவர்களைப்பற்றி மனித இதயத்தில் நிகழ்வதைப் பற்றி—எதிர்ப்பைப் பற்றிக் கவலைப்படாமல் நாடகங்கள் எழுதினார்; அமரரானார்.

இப்ஸன், நோர்வே தேசத்தில் 1828ம் ஆண்டு மார்ச் மாதம் 20ந்திகதி பிறந்தார் ஆனால் இறுதியில் இறக்கும் பொழுது 1909ம் ஆண்டு மேமாதம் 23ந் திகதி. அவர் உலகம் புகழும் நாடகாசிரியர். மிகச் சிறிய நாடு நோர்வே. அந் நாட்டு மொழியைப் பேசுவோரும் அதிகமில்லை. ஆனால் அவருடைய நாடகங்கள் எத்தனை மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன என்றோ, எத்தனை மேடைகளில் நடிக்கப்பட்டிருக்கின்றன என்றோ கணக்கெடுப்பது முடியாத காரியம். அத்தனை உலகப் பிரசித்திபெற்ற மேதை அவர்.

இத்தனை புகழுக்கும், எல்லாரும் இப்படி ஏகோபித்துக் கொண்டாடுவதற்கும் காரணம் என்ன? அப்படித்தான் பேனாவினால் என்ன மாயம் செய்தார்? அவர் எழுத்தில் என்ன மந்திரம் இருந்தது?

அவரே சொல்கிறார்: ''நான் நாடகம் எழுதவுமில்லை. நாடக பாத்திரங்களைச் சிருஷ்டிக்கவுமில்லை. என்னைச் சுற்றி நடந்ததைக் கண்டேன்; எழுதினேன், நான் சந்தித்தவர்களைப் பேனா மூலம் சித்திரமாகத் தீட்டினேன். அவ்வளவே தான்.''

அவர் பாத்திரங்களை மக்கள் கட்டுக்கதையாக, கற்பனை உருவங்களாக மதிக்கவில்லை. அவள் அப்படி நடக்கலாமா, இப்படிச் செய்தது சரியா, என்றெல்லாம் அவர் பாத்திரங்களைப் பற்றி விவாதிக்கத் தலைப்பட்டார்கள். அவ்வளவு தான் சூத்திரம்.

அவருடைய சொந்த வாழ்வும் அவரோடு தொடர்புள்ளவர்களின் அனுபவங்களும் அவருடைய நாடகங்களில் பிரதிபலிப்பதால் தான் அவருக்கு ஈடில்லா வெற்றி கிடைத்தது. அவரோடு சேர்ந்தவர்கள் பலர் தங்களைப் பற்றி எழுதிவிட்டார் என்று குறைப்பட்டது உண்டு. அதனால்தான் உயிருள்ள பாத்திரங்களை—நடமாடும் உருவங்களை நாம் அடிக்கடி சந்திக்கும் பிரகிருதிகளை ஏன், சிலசமயம் நம்மையும்கூட, இப்ஸனின் இலக்கிய சிருஷ்டிகளில் அடிக்கடி காணமுடிகிறது. முன்னால் வாழ்ந்தவர்களின் பாணிக்கு முற்றிலும் புறம்பானது இவர் போக்கு.

இவர் வாழ்வில் இன்னும் ஒரு புதுமை. இளமையில் வறுமையில்தான் வாழ்ந்தார். கவிஞர்கள், கலா மேதைகளின் பரம்பரைச் சொத்தல்லவா தரித்திரம். ஆனால் இருபதாவது வயதில் உண்ண, உடுக்க வழியின்றி இருந்தவர் எழுபத்தெட்டாவது வயதில் கோடீசுவரராய் இறந்தார் என்றால் வியப்பாயில்லையா? உயிரோடு இருக்கும்வரை மேதாவிகளுக்கு மதிப்புக் கிடையாதென்பது இவர் விஷயத்தில் உண்மையல்ல.

முதலில் கொஞ்சக்காலம் மருந்து கலக்கப் பழகினார். வேலை நிலைக்கவில்லை. மருத்துவ கலாசாலையில் படிக்க எண்ணினார். பரீட்சை தேறவில்லை. நல்லவேளை! வைத்தியப் படிப்பு என்ற ஆசையை அதோடு மூட்டை [illegible] அவரைத் தனி மனிதருக்கு மருந்து கலந்து [illegible] தற்காகப் படைக்கவில்லை. சமூகப் புண்களுக்குச் சத்திர வைத்தியம் செய்யவும் மனிதரை உள்நின்று அரித்து அறுக்கும் வியாதிகளுக்கு நிவாரணம் தேடவும் அல்லவா படைத்தான்!

பதினெட்டாவது வயதில் அவர் எழுதிய முதல் கவிதை 'ராஜினுமா' என்பது. இருபத்தொராவது வயதில் அவருடைய முதல நாடகம் 'கடாலினு' எழுதப்பட்டது. இதன்பின் அவர் எழுதிய தேசியகீதங்களுக்கும், நாடகங்களுக்கும், கதைகளுக்கும் புது உருவம் கொடுத்த பழைய கதைகளுக்கும் கணக்கே இல்லை.

பேனாவைத் தொடவேண்டியதுதான்; அது தானாகவே ஓடும். எழுதுவார், அப்புறம் திரும்பத் திரும்பத் திருத்துவார். கஷ்டப்படுவார், தன் நாடகமே நினைவாக உலாவுவார். யாரைக் கண்டாலும் தன் நாடகத்தைப் பற்றிப் பேசுவார். ஒவ்வொரு வார்த்தையும் சரியாக அமையும்வரை அவருக்குப்'பிரசவவேதனை' தான். காட்சி ஜோடனை, அரங்க அமைப்பு முதலியன வற்றைப்பற்றியும் நுணுக்கமான குறிப்புக்கள் எழுதி விடுவார்.

அவர் எழுதிய நாடகங்களில் சிறந்தது 'இதுதான்' என்று விமர்சகர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஒருமுகப்பட்ட அபிப்பிராயம் இல்லை. ஒவ்வொன்றிலும் புதுமை காண்கிறார்கள்; போற்றுகிறார்கள். காரணமில்லாமல் என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்த விமர்சகர்களைப்பற்றி இப்ஸன் கொண்டிருந்த கருத்து விசித்திரமானது. 'காட்டு வாத்து' என்ற நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை பிரசுரகர்த்தருக்கு அனுப்பும் போது அவர் எழுதிய குறிப்பு: ''இந்த நாடகம் என் தயாரிப்புகளில் ஒரு தனி ரகம். முந்தியவற்றிலும் பார்க்க இதன் அமைப்பு எவ்வளவோ மாறுபட்டது. இதற்குமேல் நான் ஒன்றும் கூறவில்லை. தேவையானதை விமர்சகர்களே கண்டுகொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் மெல்லுவதற்குப் போதிய அவல்கிடையாமற்போகாது எப்படியாயினும் பேசுவதற்கும், விவாதிப்பதற்கும் வேண்டியவற்றை அவர்கள் காணத் தவறமாட்டார்கள். அவர்கள் கயிறு திரிக்கப் போதிபகருத்துக்கள்இதிலே உள்ளன.''

அவர் கடைசியாகஎழுதிய நாடகங்கள் 'சமூகத் தூண்கள்' [1877] 'பொம்மைக் குடித்தனம்' ]1879], 'பிசாசுகள்' [1881], 'மக்களின் விரோதி' [1882], 'காட்டு வாத்து' (1884), 'ரொஸ்மர் ஷோம்' [1886], 'கடற் சீமாட்டி' [1888], 'ஹெட்டா கேப்ளர்' [1890], 'சிறந்த மேஸ்திரி' [1892], 'சின்ன இயோல்ப்' [1894], 'ஜோன் கேப்ரியல் போர்க்மன்' [1896], 'இறந்தவர் பிழைத்தால் . . .' [1899], என்பன.

சில வாரங்களுக்கு முன்பு லண்டனில் இந்த நாடகம் நடைபெற்றபோது ரசிகர்கள் சொன்னதாவது: நோரா விரும்பிய கோரிக்கைகள் எல்லாம் கிடைத்துவிட்ட சமூகத்தில் இந்த நாடகம் கவர்ச்சியிலும் சுவையிலும் அன்று போலவே இன்றும் இருப்பது பிரமிப்பையூட்டுகிறது. ''ஆனால் நம் நாட்டுப்பெண்கள் இன்று, அங்கே நோரா அன்றிருந்தநிலையில் இருப்பதினால் இந்த நாடகம் பன்மடங்கு ஆவலுடன் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. நோர்வே நாட்டுப் பாத்திரங்கள் குலப் பிரதிநிதிகள், நோர்வே நாட்டுச் சிக்கல்கள் உலகத்துச் சிக்கல்கள் இப்ஸனின் நாடகங்களிலே.

நாடக இலக்கிய அரியணையில் ஏறி உட்கார்ந்து கொள்ள ஒருவருக்குத்தான் யோக்யதை இருந்தது. அவர்தான் ஹென்றிக் இப்ஸன். அவருக்கு வாரிசு கிடையாது. ஆனால் யாராவது பிறக்காமலா போய் விடப்போகிறார்கள்?

அப்படி ஒருவர் பிறந்தால் அது மொழியின் அதிர்ஷ்டம்.

## இன்றைய பலன்

10-8-67
வியாழக்கிழமை
[ஆடிமாதம்25-ந்திகதி]

நட்சத்திரம் - அத்தம்
திதி - பஞ்சமி இரவு 11-23 வரைமேல் ஷஷ்டி.
சுபநேரம் - 7-34-9-04
ராகுகாலம் -1-34-3-04

மேடம் - அமைதியின்மை
ரிஷபம் - பெருவாழ்வு
மிதுனம்- பொருள் நட்டம்
கடகம்- உறவு முறை ஓடிவரும்
சிங்கம்-நினைப்பது நடக்காது
கன்னி-இன்புற்று வாழ்வீர்
துலாம்- கல்வி செல்வம்
விருச்சிகம் - நற் பெயர் கேட்டல்
தனுசு - பந்துக்கள் ஆதரவு
மகரம் - வாழ்வில் ஒரு திருநாள்
கும்பம்- மனப்போராட்டம்
மீனம் - காதல் செய்வீர்

—சோதிடக்கலா[illegible]
திருமலை வேலு[illegible]

## நாடும் நடப்பும்

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பார்கள். கொழும்புப் பத்திரிகைகள் சில கொட்டை எழுத்துக்களில் வெளியிடும் செய்திகளைப் பார்த்தால் இந்தப்பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில்சென்றசிலதினங்களில் சில சில அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இச்சம்பவங்கள் மேலும் பரவாமல் தடுக்கவும் அமைதியை நிலைநாட்டவும் பொலிசாரும் மற்றையோரும் பெரும் பிரயத்தனம் செய்துவருகின்றனர். உணர்ச்சியைத் தூண்டி வெறியாக்கிவிடக்கூடிய பிரச்னைகளில் பத்திரிகைகள் பொறுப்புடனும் நிதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியம். 'கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான்' என்பது போல வதந்திகளைப் பரப்புவவதற்கும் நிலைமையை மோசமாக்குவதற்கும் பத்திரிகைகள் இடமளிக்கும் முறையில் செய்திகளை வெளியிடுவது நல்லதுமல்ல; பண்புமல்ல. பொறுப்பற்ற முறையில் சில பத்திரிகைகள் நடந்துகொள்வதால்தான் பத்திரிகை செய்திகளுக்கு அரசாங்கம் தணிக்கை விதிக்க வேண்டியேற்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டுள்ள அசம்பாவித சூழ்நிலை விரைவில் நல்லமுறையில் மாறி அமைதிநிலவ வழிபிறக்குமென எதிர்பார்ப்போம். இதற்கு பொலிசாருடன் பொதுமக்களும்ஒத்துழைக்க வேண்டும். சமய, சமூகத் தலைவர்களும் முன்வந்து அமைதியை நிலைநாட்ட துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

கொழும்புப் பத்திரிகைகள் தாமாகவே செய்திகளை தணிக்கைசெய்து பொறுப்புடன் நடந்துகொள்வது நல்லது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவை சமீபத்தில் பார்த்திருப்பீர்கள் அவர் தோற்றத்தில் ஒரு மாற்றம் இருக்கிறதைக் கவனித்தீர்களா?

பாகவதர் 'குறொப்' உங்களில் பலருக்கும் நினைவிருக்கும். அரசாங்க அதிபரின் தலைமுடியும் பாகவதர் பாணிக்கு விரைவில் வந்தாலும் வந்துவிடலாம்.

திரு. அபயசேகரா கலா ரசிகர் என்பது பலருக்கும் தெரிந்தவிஷயம். தமிழே தெரியாத அவர் தமிழில் தயாரித்துவரும் 'பெண் பாவை' என்னும் நாடகம் நாளை மாலை வேம்படி றிம்மர் மண்டபத்தில் மேடையேறுகிறது. சிறந்த தயாரிப்பாம்.போய்ப்பாருங்கள்.

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா-சே-துங் மீது பத்துக் குற்றங்கள்

## ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தின் 25-வது ஆண்டு விழா

### இந்தியாவெங்கும் கொண்டாட்டம்

புதுடில்லி, ஆக. 9

**இந்தியாவில் வெள்ளையனேவெளியேறு’இயக்க தினத்தின் 25-வது ஆண்டு விழா இன்று நாடெங்கும் கொண்டாடப்பட்டது.**

இதே நாளில்—ஆகஸ்ட் 9ந் திகதியன்று தான், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அப்துல் கலாம் அஸாத் ஆகியோருட்படப் பல பெரிய தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

**தலைவர்கள் கைதாகினர்**

அன்று கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. ‘செய்வீர் அல்லது செத்து மடிவீர்’ என்ற வாசகமும் அன்றைய தீர்மானத்தில் இடம்பெற்றது.

இன்று இத்தீர்மானத்தை யொட்டியே தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தைஇந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தொடக்கி வைப்பார்.

# கைதி முகாம்களில் 170 லட்சம் மக்கள் மறைந்ததாகப் புகார்

## துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியான தகவல்கள்

பீகிங், ஆக. 9

**சீனக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரான திரு. மா சே துங் விட்ட 10 குற்றங்களடங்கிய துண்டுப்பிரசுரங்கள் சீனவில் வெளியாகியுள்ளன.**

மா சே துங் ஆட்சியின் கீழ், 170 லட்சம் மக்கள் கைதி முகாம்களில்காணமற்போய் விட்டனர் என அத் துண்டுப் பிரசுரங்களில் கூறப்பட்டுள்ளது.



**பல குற்றங்கள்**

நாட்டில் பேசும் உரிமையை மட்டுமன்றி,வாழும் உரிமையையும் மா சே துங் மறுத்துள்ளதாகவும், குடும்பங்களைக் குலைப்பதற்கும், பெரியோர், முதியவர்க்கு எதிராகஇளைஞர்களை தூண்டிவிடுவதற்கும் அவர் காரணமாக விருந்தாரென்றும் அத் துண்டுப்பிரசுரங்கள்மேலும் குற்றம் சுமத்தியுள்ளன.

மா சே துங் சீனக், கலாச்சாரத்தை அழித்தார்; தொழிலாளிகளின் சம்பளத்தைக் குறைத்தார்; அவர்களின் உணவு ரேஷன்களை ஒழித்தார். எனப் பல குற்றச்சாட்டுக்களை அப்பிரசுரங்கள் அவர்மீது சுமத்திய்கின்றன.

**துப்பறிய முயற்சி**

இத்துண்டுப் பிரசுரங்களின் மூலத்தைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் சீன இரகசிய துப்பறியும் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொங்கோவில் போர்

பிரசவில், ஆக. 9

கொங்கோவில் அரசாங்கத்துருப்பினருக்கும் வெளியார் கூலிப்படைகளுக்கும் இடையே போர் நடப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொங்கோவின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரான புக்காவோவை அந்நிய கூலிப்படையினர் கைப்பற்ற முயற்சிசெய்வதாகவும, அரசாங்கப் படையினர் அதை முறியடிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது.

கூலிப் படையினருக்குக் கட்டாங்கா துருப்பினர் சிலரும் உதவியளித்துவருவதாகவும் செய்திகள் அறிவிக்கின்றன.

இப்போரில் ஏற்பட்டுள்ள ஆட் சேதம் பற்றி எதுவும் இதுவரை தெரியவில்லை.

## ஹொங்கொங் கலவரங்கள் மீண்டும் தலைதூக்கின

ஹொங்கொங், ஆக. 9

ஹொங்கொங்கில் நேற்று மீண்டும் கலவரங்கள் ஏற்பட்டுள்ளன.

சுமார் 500 ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று ஹொங்கொங் தெருக்களில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர் கல்வீச்சில் இறங்கிய போது, பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். அதற்கும் ஆர்ப்பாட்டக்காரர் கட்டுக்கடங்காமற்போகவே, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் காயமுற்றனர். காயமுற்ற தமது சகாக்களை ஆர்ப்பாட்டக்காரர் உடனுக்குடன் இழுத்துக்கொண்டு சென்றுவிட்டபடியால், காயமடைந்தவர்களின் சரியானதொகையைப் பொலிசார் கணிக்க முடியவில்லை.

# சாராயம் எனக்கருதி வாணிஷ் குடித்தவர்களில் 53 பேர் மரணம்

## பலரது நிலை கவலைக்கிடம்

### தமிழ்நாட்டில் சோகச்சம்பவம்

சென்னை, ஆக. 9

**தமிழ்நாட்டில் சாராயம் என்று எண்ணி வாணிஷைக் குடித்து இறந்தவர் தொகை 53ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 8 பேர் பெண்களாவர்.**

சாராயத்துக்குப் பதிலாக வாணிஷைக் குடித்த இச் சோக சம்பவம் சென்ற ஞாயிறன்று நடைபெற்றது. குடித்தவர்களில் 10 பேர், கிஷாம்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய இடங்களிலுள்ள தமது குடிசைகளிலேயே உயிரை நீத்தனர். மற்ற 41 பேரும் ஆஸ்பத்திரியில் உயிர்நீத்தனர்.

**ஆஸ்பத்திரியில் 91பேர்**

ராயப்பேட்டை,ஸ்டான்லி ஆஸ்பத்திரிகளிலும், சென்னை பெரியாஸ்பத்திரியிலும் மொத்தம் 91 பேர் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இவர்களின்பெரும்பான்மையோர் கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**நகரசபைத் தொழிலாளர்**

வாணிஷ் குடித்தவர்களில் பெரும்பாலோர், சென்னை நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களாவர். ஆடி அமாவாசையை முன்னிட்டு இவர்கள், சாராயம் என்று கருதி வாணிஷைக் குடித்தார்கள் என்று தெரியவருகிறது.

# கொழும்பு யோசனைகள் அடிப்படையில் இந்தியா-சீன பேச்சுவார்த்தைகள்

## விரைவில் நடக்குமென திரு. சாக்ளா நம்பிக்கை

புதுடில்லி, ஆக. 9

கொழும்பு யோசனைகளின் அடிப்படையில், இந்தியாவுடன் சீன விரைவில் பேச்சுவார்த்தைகளில் இறங்குமென்றும், அது தனது தவறை உணர்ந்துகொள்ளுமென்றும் இந்திய வெளியுறவு மந்திரி திரு. சாக்ளா நேற்று லோகசபையில் நம்பிக்கை தெரிவித்தார்.

சீனவும், பாகிஸ்தானும் சட்டவிரோதமாகப் பிடித்துள்ள இந்தியப் பகுதிகள் இந்தியாவின் மொத்த நிலப் பரப்பு இவைபற்றிய இரு பிரேரணைகள் மீது நடந்த விவாதத்தில் பங்குபற்றிப் பேசுகையிலேயே திரு. சாக்ளா இவ்வாறு கூறினர்

**‘ஓர் அங்குலமும் விடவில்லை’**

‘இந்த நாட்டின் ஓர் அங்குலத்தையாவது சீனவிடமோ அல்லது பாகிஸ்தானிடமோ விட்டுவிடவில்லை’ என்று திரு. சாக்ளா அங்கத்தவர்களுக்கு உறுதியளித்தார்.

சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட சில பகுதிகள்மீது சீனவோ, பாகிஸ்தானே உரிமை பாராட்டுவதை இந்தியா ஒப்புக்கொள்ளவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

## லேடிஇராமநாதனுக்கு நினைவுச் சின்னம்

கொழும்பு, புதன்

காலஞ்சென்ற லேடி இராமநாதன் சைவசமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் தமது வாழ்நாள் முழுவதுமே சேவை செய்துள்ளாரென்றும் அவரது நினைவாக திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள நவக்கிரக கோவிலை அமைத்து உதவுவதெனவும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இராமநாதன் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக்கிளை ஆண்டுவிழாவில் தீர்மானிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் உதவிய படக்காட்சியும் ராஜ் நகைச்சுவை மன்றத்தினரின் நகைச்சுவை விருந்தும் விழாவில் இடம்பெற்றன. இரவு போசனமும் வழங்கப்பட்டது.

# வெளிநாடுகள் தலையீட்டை தவிர்க்க ஒத்துழைப்பு

## ‘ஐந்து ஆசிய நாடுகள்’ தமக்கிடையே உடன்பாடு

பாங்கொக், ஆகஸ்ட் 9

**வெளிநாடுகளின் தலையீட்டைத் தமது பிரதேசங்களில் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதென்று பாங்கொக்கில் கூடிய ஐந்து ஆசிய நாடுகள் முடிவுசெய்துள்ளன.**

வெளியார் தலையீட்டை ஆசியநாடுகள் ஒன்று சேர்ந்து தவிர்க்கவேண்டும் என்று மலேஷிய உதவிப் பிரதமர் திரு. துங் அப்துல் ரஸாக் கேட்டுக்கொண்டார்.

இந்த ஒத்துழைப்பு எந்த ஒரு நாட்டுக்கும் எதிரானதல்லவென்று சிங்கப்பூர் வெளியுறவு மந்திரி திரு. ராஜரத்தினம் உறுதியளித்தார்.

**ஆதாம்மாலிக் வேண்டுகோள்**

பிற நாடுகளின் தலையீட்டால் ஆசிய நாடுகளில் குழப்பங்கள் ஏற்படுவதாகவும், எல்லா ஆசிய நாடுகளும் இணைந்து, இந்த அந்நிய தலையீட்டைமுறியடிக்க வேண்டுமென்றும் இந்தோனேஷிய வெளியுறவுமந்திரி திரு. ஆதாம்மாலிக் வலியுறுத்தினர்.

மற்றும் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து வெளியுறவு மந்திரிகளும் இதேகருத்தை வெளியிட்டனர்.

ஆசியநாடுகளிடையே கருத்துவேற்றுமைகள் இருந்தபோதிலும், அவற்றைச் சுமுகமாகத் தீர்க்க முடியுமென்ற நம்பிக்கை இந்த ஐந்து நாடுகளின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## ஈராக்குக்கு ரஷ்ய பாதுகாப்பு மந்திரி

பாக்தாத், ஆக. 9

ஈராக்குக்குவிஜயம்செய்யுமாறு சோவியத் பாதுகாப்பு மந்திரிக்கு விடுக்கப்பட்ட அழைப்பை அவர் ஏற்றுள்ளார். விரைவில் அவர் ஈராக் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் பாதுகாப்பு மந்திரி மேஜர் ஜெனரல் சுக்ரி, தமது 18 நாள் சோவியத் விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியதும் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

## ‘கமிஷன் நியமிக்கப்படும்’

### செனட்டில் மந்திரி

கொழும்பு, புதன்

காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம அமைப்பு முதலிய சகல முறைகளையும் ஆராய்வதற்காக விரைவில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவிருக்கிறது.

இவ் விசாரணைக் கமிஷனில் தகுதிவாய்ந்தவர்கள் நியமிக்கப்படுவார்கள்என்ற தகவலை வர்த்தக மந்திரி டாக்டர் எம் பி. பி. [illegible] செனட்சபையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் நிர்வாகம் சரியான முறையில் நடைபெறவில்லையென பல புகார்கள்கிடைத்தன. இதன் காரணமாக தலைவர் பதவியில் மாற்றம் வேண்டுமென்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். மேலதிகமாக குமாஸ்தாக்களை நியமனம்செய்ய கூட்டுத்தாபனம் அமைச்சின் அங்கீகாரத்தை கோரியிருந்தது. கூடுதலான ஊழியர்கள் இந்த ஸ்தாபனத்தில் வேலை செய்துவந்ததால் புதிய நியமனங்களை எனது அமைச்சு தாமதித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகள் சேதமாம்

தாளையடி, புதன்

குடாரப்புக்கும் தாளையடிக்குமிடையே நடைபெற்றுவரும் பெற்றோல் ஆராய்ச்சியின்போது டயனமைட் வெடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நில அதிர்ச்சி காரணமாக அருளானந்தம் சின்னத்துரை பலவீனப்பு செல்லத்துரை ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன என்றும் இது சம்பந்தமாக மேலிடத்துக்குப் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## வடி வாய்க்கால்கள்

அராலி, புதன்

மிதமிஞ்சிய அகால மழை சிலசமயங்களில் பெய்வதால் சென்ற மூன்றாண்டுகளாக இப்பகுதியில் பயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. மேலதிக வெள்ளம் கடலுக்குச் செல்லும் வடிவாய்க்கால்கள் தூர்ந்துபோனமையாலும் சில இடங்களில் இவ்வாய்க்கால்கள் அழிக்கப்பட்டமையாலும் வயல்களுள் நீர் அளவிற்கு மேலாக நின்று பயிர்களை மூடி அழுகச் செய்துவிடுகிறது. இவ்வாண்டு இவ்வடி வாய்க்கால்களை வெட்டி ஆழமாக்கிக் கமத்தொழிற் பகுதியார் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். நடப்பு நிதிவருடம் முடிவதற்குள் இவ்வேலை பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## திடீர் சோதனை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள கடைகளைத் திடீர் சோதனையிடுவதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உபஉணவுப் பொருட்களைப் பல கடைச் சொந்தக்காரர்கள் பதுக்கி வைத்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த செய்திகளைத் தொடர்ந்தே அவர்கள் இந்தத் திடீர் வேட்டையில் இறங்கியுள்ளார்கள். ஆனையிறவு பரிசோதனை முகாமிலிருந்து வரும் உபஉணவுப் பொருட்களினதும், பால் மாவுகளினதும் தொகைகள் பற்றிய அறிவித்தலைக் கொண்டு பொலிஸார் இப்பரிசோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பொலிஸார் பல கடைகளையும் திடீர் சோதனை செய்ததாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பொலிஸார் பல கடைகள் மீதும் பலத்த கண்காணிப்புச் செலுத்திவருகின்றனர். (ந. நி.)

## றம்பட்டான்பழ கூடை எங்கே?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றின் வாசலில் வைக்கப்பட்ட றம்பட்டான்பழக்கூடை மறைந்தமர்மம் என்ன? இது சம்பந்தமாக அதன் சொந்தக்காரர் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியைச் சேர்ந்த பெர்னாண்டோ செல்லர் என்பவர் வெளியிடத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட 4 கூடை றம்பட்டான் பழத்தையும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் வாசலில் வைத்துவிட்டு உள்ளே தேனீர் அருந்தச் சென்றாராம். வெளியே வந்தபோது அந்த கூடைகளை அங்கு காணவில்லையாம். அவ்வழியால் வந்த மாநகரசபை லொறியில்வந்த உத்தியோகஸ்தர்கள் அதனை ஏற்றிச்சென்றுவிட்டதாக அவர் கருதுவதாகவும் மாநகரசபையினரிடம் கேட்ட

## அங்கத்தவர் சிலர் அதிருப்தி

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் உதவி ஆணையாளரின் தலைமையில் நடைபெற்றது. முன்னைய தலைவர் மீண்டும் சமாசத் தலைவராகத் தெரியப்பட்டார். கண் பார்வையை முற்றாக இழந்த ஒருவர் தலைவராயிருப்பதை விரும்பாத சில அங்கத்தர்கள் மேல் நடவடிக்கை எடுக்க யோசிப்பதாக அறியப்படுகிறது.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

புலோலி, புதன்

தென் புலோலி அறிவகம் சனசமூகநிலையத்தின் 12வது ஆண்டுவிழாவும், விளையாட்டுப் போட்டியும் தென் புலோலி முருகையினியன் கோவில் [illegible] நடைபெற்றது. கெருடாவில் கிராம சேவகர் திரு. எஸ். ஜெகநாதன் தலைமை வகித்தார். உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். பண்டிதர் கணபதிப்பிள்ளை புலோலி தெற்கு கிராம சேவகர் திரு. வி. சேதுநாயகம் ஆகியோரும் பேசினர்.

## இளைஞர் மன்றம

புலோலி, புதன்

துன்னாலை வடக்கு இளைஞர்களால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட லட்சுமிமித்திரன் இளைஞர்மன்றநிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்- க. சுதர்சனன். உபதலைவர்- வ. ஆனந்தசிவா காரியதரிசி. ச. சற்குணனந்தன். உபகாரியதரிசி- வே. செந்திவேல், தனாதிகாரி- ச. சியாமநாதன், உபதனாதிகாரி- க. கமலானந்தன். மன்றப் பொறுப்பாளர் ப. பரராஜசிங்கம், உபமன்றப் பொறுப்பாளர் வ. ஆனந்தசிவா.

விளையாட்டுக் கழகம் ஒன்று ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. விளையாட்டுக் கழகத்துக்கு திரு. சி. கணேசானந்தம் தலைவராகத் தெரியப்பட்டார்.

## துணுக்காய் மிளகாய் பரிசு பெற்றது

துணுக்காய், புதன்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சியில் துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. க. சோமசுந்தரம் செத்தல் மிளகாய்க்கான முதல் பரிசைப் பெற்றார்.

## தொடர்ந்தும் கஷ்டம்

துணுக்காய், புதன்

இம்மாதம் முதல் [illegible] தொடக்கம் காலையடியிலிருந்து காலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கு நேராக பஸ் சேவையிருக்குமென இ. போ. ச. மேலதிகாரிகள் அறிவித்திருந்தும் அவ்வித சேவை இன்னும் ஆரம்பிக்கப்படாதிருப்பதால் பிரயாணிகள் தொடர்ந்தும் கஷ்டமடைகின்றனர்.

## வாடகைப்பணம் கொடுபடவில்லையாம்

புன்னாலைக்கட்டுவன், புதன்

புதிதாக மாற்றம் பெற்று இப்பகுதிக்கு வந்தபல ஆசிரியர்களுக்கு நான்கு மாதங்களாகியும் வாடகைப்பணம் கொடுக்கப்படவில்லையாம். இவ்விஷயம் கோப்பாய் எம். பி. யின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

போது அவை திருப்தித்தரப் படாமையால் அவர் இப்போது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

## "ஜப்பானிய பெண்களும் நம்நாட்டுப் பெண்களும்"

புலோலி, புதன்

மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பெற்றோர் தினவிழா வண. சுவாமி எஸ். ஜே. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

''ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் பெண்கள் கைத்தொழில்களில் ஈடுபடுவதின் மூலம் தமது காலத்தைக் கழிக்கிறார்கள்ளவும், நம் நாட்டுப் பெண்கள் வீண் கதைகள் பேசுவதிலேயே தமது நேரத்தைச் செலவழிப்பதாகவும்,'' விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் திரு. [illegible] சத்தியமூர்த்தி கூறினார்.

## பிலிப்பைன்ஸ் பயணம்

கல்முனை, புதன்

கல்முனை அர்ச். [illegible] சபையைச் சேர்ந்த சவ் சகோதரர்கள் லீனஸ், பயஸ் ஆகிய இருவரும் பிலிப்பைன்ஸ் தீவுக்குப் பயணமானார்கள். விவசாயத் துறையிலும் மற்றும் தொழில் நுட்பத்திலும் மேலதிக பயிற்சி பெறவே இவர்கள் சென்றுள்ளதாக அறியப்படுகிறது.

## சன்னதிமட்டத்தில் இருவர் மரணம்

வல்வெட்டித்துறை, புதன்

முருகன் தம்பிமுத்து என்ற வயோதிபரும், கணபதிப்பிள்ளை செல்வராசா என்ற இளைஞனும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி மடமொன்றில் கடந்த திங்களன்று இறந்துகிடக்கக் காணப்பட்டனர். மரண விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு. சி. தாமோதரம்பிள்ளை தம்பிமுத்து வயோதிபத்தினாலும் சுகவீனத்தினாலும் இறந்ததாகவும், இளைஞன் செல்வராசா பலகாலம் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தமையால் இறக்கவேண்டி ஏற்பட்டதென்றும் தீர்ப்பளித்தார்.

## அரசாங்க அதிபருக்கு மகஜர்

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவில் உள்ள களிக்கரையோரங்களில் வசித்துவரும் மக்கள் தற்போது பெரும் கஷ்டமடைந்து வருகிறார்கள். அவர்கள் வீடுகளுக்கு அண்மையில் உள்ள களிகள் நீர் வற்றி இருப்பதால் மேற்பரப்பில் அமைந்திருக்கும் உவர் மண் தற்போது வீசும கடும் காற்றினால் அள்ளுண்டு வீடுகளுக்குள்ளும், சமையல் அறைகளுக்குள்ளும் வந்து நிரம்புகின்றனவாம். இதனால் வீடு உணவு யாவுமே ஒரே உவர் மண்ணும் தூசியுமாக இருப்பதால் அவர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்.

இப்பெரும் கஷ்டநிலையை நேரில் பார்வையிட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிடம் நெடுந்தீவு நடுக்குறிச்சி கிராமமுன்னேற்றச் சங்கம் இக்களிகளை ஆழமாக்கித்தருமாறு கோரும் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

## கால் நடைகள் கஷ்டம்

நெடுந்தீவு, புதன்

கடந்த பல மாதங்களாக மழையில்லாமையால் இங்குள்ள கால்நடைகள் குடிதண்ணீரும் புல்லுமில்லாது பெரும் கஷ்டமடைகின்றன. இதுவரை இங்குள்ள புல்வெளிகளில் பல மாடுகள் இறந்து கிடக்கின்றன. தொடர்ந்து மழை பெய்யாவிட்டால் கால் நடைகள் [illegible]

## யாழ். மாவட்டத்தில் மேலும் இரு குடியேற்றத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் இரு குடியேற்றத்திட்டங்களில் படித்த வாலிபர்கள் குடியேற்றப்படவிருக்கிறார்கள். இதற்காக விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன. இது சம்பந்தமாக வடபகுதி மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஊரணியம் பற்று, கணிக்கணக்காடு ஆகிய இருகுடியேற்றத் திட்டங்களுமே இவையாகும். விஸ்வமடுக்குளம் படித்த வாலியர் குடியேற்றத்திட்டமும், மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத்திட்டமும், உபஉணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டது போல ஊரணியம்பற்று, கணிக்கரைக்காடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டங்கள் தென்னைப் பயிர்ச் செய்கைக்காகவே அமைக்கப்பட்டுள்ளன.

மற்றைய குடியேற்றத் திட்டங்களைப் போலவே இங்கு குடியேற்றப்படும் வாலிபர்களுக்கும், குடியிருக்கவும், தென்னை வளர்க்கவும் அரசாங்கம் தலா 3 ஏக்கர் காணியை வழங்கவிருப்பதாகத் தெரிகின்றது. இது பற்றிய பூரண விபரங்களும் அடுத்தமாத முடிவுக்குள் அறிவிக்கப்படவிருக்கின்றது.

இலங்கையில் உற்பத்தி பண்ணப்படும் தேங்காய்க்கும், தென்னைப் பொருட்களுக்கும் சர்வதேச சந்தையில் போதிய மதிப்பு இருப்பதினால் தென்னை வளர்ப்பு மூலம் இலங்கை அரசாங்கம் கூடிய வருமானம்பெற முடியுமென்பதினாலேயே இக்குடியேற்றத் திட்டங்கள் இரண்டும் தென்னை வளர்ப்புக்குமாத்திரம் அமைக்க காணி அமைச்சு முடிவு செய்துள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேலும் வவனியா மாவட்டத்திலும் உப உணவுப் பொருள் உற்பத்திக்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 250 குடும்பங்கள் இவ்வருட முடிவுக்குள் குடியேற்றவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ்ப்பாணம் காணி அபிவிருத்தி அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். [ந. நி.]

## அச்சிடுவோர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

வடமாகாண அச்சிடுவோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 12-ம் திகதி மாலை வண்ணார்பண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக் கூட்டத்தில் கடதாசி விலையைக் குறைத்தல், மொத்த விற்பனையில் கழிவு தருதல், அச்சக ஊழியர் சம்பள விகிதங்களைத் திருத்துவது ஆகியன பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகசபை தெரிவும் நடைபெறும். (ந. நி.)

## தபால்தந்தியாளர் மகாநாடு

வவனியா, புதன்

''ஒற்றுமையின் மூலமே உரிமைகளைப் பெறமுடியும். சேவையின்மூலம் மக்கள் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். உலகிலுள்ள சகல தரத்தாரும் எமது சேவையைப் பெறுகிறார்கள். நேர்மையையும் ஒற்றுமையையும் முன்வைத்து நாம் கடமையாற்றுவோம்'' என வவனியாவில் நடைபெற்ற அகில இலங்கை தபால், தந்தி ஊழியர்சங்க வவனியாக்கிளையின் 11-வது வருடாந்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய சங்கத்தலைவர் திரு. ஜே. தியாகராஜா கூறினார்.

## திருட்டு வழக்கில் 6 மாத கடுழியம்

முல்லைத்தீவு, புதன்

கே. செல்லத்துரை அல்லது மாரிமுத்து என்பவர் களிக்காடு என்னுமிடத்தில் அவர் கூலிவேலை செய்த வீட்டுப் பெண்ணின் 500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைக் களவாடியதாக முல்லைத்தீவுப் பொலிஸார் தொடர்ந்த வழக்கில் முல்லைத்தீவுக் கூட்டு நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ஆறு மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார். சிறைவாசம் முடிந்ததும் இரண்டு வருடம் பொலிஸ் கண்காணிப்பில் இருக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.


வியாபாரம் பெருக விளம்பரம்செய்க

"ராஜேஸ்"

உங்கள் சொகுசுக்கேற்ற சாமான்கள்

O ஸ்பிரிங் கட்டில் பிரேம்கள், எல்லா அளவிலும்



O டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
O டிலெட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
O ஆஸ்பத்திரி கட்டில்கள்
O டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
O ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
O பஞ்சு இலம்புமெத்தைகள்
O ஸ்பிரிங் மெத்தைகள்
O குழந்தை தொட்டில்
O மெத்தை ஸ்பிரிங்குகள்
O திரைகள்
O சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்ட விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,
62, பூளுமெண்டால் றோட்,
கொழும்பு-13.
தொலைபேசி: 2233/34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையும் கண்டியும் ஹொக்கி பிரிவுச் சாம்பியன்களாக தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன் இலங்கைப் பாடசாலைகளின் 8-வது தேசிய ஹாக்கிச் சுற்றுப் போட்டியில் நேற்றுக் காலை நடைபெற்ற தெரிவுப் போட்டிகளில் கீழ்ப்பிரிவிலும் மேற்பிரிவிலும் மாத்தளைக் கோஷ்டியும்: கண்டி வைட்ஸ் கோஷ்டியும் பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

கீழ்ப்பிரிவில் மாத்தளைக் கோஷ்டிக்கும், கண்டி புளூஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற பெரும் மோதலின் பின் மாத்தளைக் கோஷ்டி கண்டி 'புளூஸ் கோஷ்டியை 1—0 கோலால் தோற்கடித்து பிரிவுச் சாம்பியனானது.

கொழும்பு றெட்ஸ் கோஷ்டிக்கும், கண்டி வைட்ஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மற்றொரு கீழ்ப் பிரிவுப் போட்டியில் கொழும்புக் கோஷ்டியை 2—0 கோல்களால் தோற்கடித்த கண்டி வைட்ஸ் கோஷ்டியும் பிரிவுச்சாம்பியனானது. இப்போட்டியில் இரு கோஷ்டியும் ஒன்றையொன்று விட்டு கொடுக்காமல் கடைசிவரையும் கடுமையாகப் போட்டியிட்டன.

இடைவேளை வரைக்கும் கொழும்புக் கோஷ்டியின் ஆட்டம் அருமையாக விருந்தது. இச் சந்தர்ப்பங்களில் கண்டி முன்னணி வீரர்களின் அநேகமான கோலடிக்கும் முயற்சிகள் கொழும்பு பின்னணி வீரர்களால் முறியடிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தன. இடைவேளைக்குப்பின்னர் கண்டி வீரர்களிடையே ஒரு புது உற்சாகம் காணப்பட்டது. அலை அலையாக வந்து கொழும்பு வீரர்களைத் திணறடித்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கண்டி அடுத்தடுத்து இரு கோல்களை அபாரமாக விளாசியது. இக் கோல்களை எம். எஉ. பவுதுடீன், ஏ. எஸ். எம். பசால் ஆகிய முன்னணி வீரர்கள் முறையே போட்டனர். இக்கட்டங்களில் கொழும்பு கோல் காப்பு வீரர்களின் விளையாட்டு ரசிக்கத்தக்கதாயிருந்தது.

கொழும்பு றெட்ஸ் கோஷ்டிக்கும், கண்டி வைட்ஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மேற்பிரிவுப் போட்டியில் கண்டி வைட்ஸ்கோஷ்டி 2-0 கோல்களால் கொழும்புக் கோஷ்டியைத் தோற்கடித்து பிரிவுச் சாம்பியனானது. இவ்விரு கோஷ்டியும் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் கண்டியின் முன்னணி வீரரான எஸ். சண்முகராசா மத்திய முன்னணி வீரரின் உதவியுடன் மின்னல் வேகத்தில் முதலாவது கோலை விளாசினர். கட்டத்துக்குக்கட்டம் கண்டி முன்னேறிக் கொண்டேயிருந்தது எனினும் கொழும்பு வீரர்கள் கூடியளவு விட்டுக் கொடுக்காமல் ஆடினர். இடைவேளைக்குப் பின்னரும் கண்டி ஒரு கோலைப் போட்டது. இக்கோலை முன்னணி வீரரான ஏ. றங்கராஜ் என்னும் வீரர் பெற்ருர். கொழும்பு வீரர்கள் இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டியில் அதிகமான கோலடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டது குறிப்பிடத்தக்கது.

ஊவாக் கோஷ்டிக்கும் மாத்தளைக்கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மற்றொரு மேற்பிரிவுப் போட்டியில் மாத்தளை 1-0 கோலால் ஊவாக் கோஷ்டியை வென்றது. இப்போட்டியும் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் ரசிப்பாகவே காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இடைவேளைக்குப் பின்னர் ஊவாக் கோஷ்டி 'போர்' அடிக்கத் தொடங்கியது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய மாத்தளைக்கு அதிகமான கோல்கள் போடும் கட்டங்கள் கிடைத்தபோதும் ஒரு கோலே பெற்றது. இக்கோலை மத்திய முன்னணி வீரரான பி. ரவீந்திரன் அருமையாக விளாசினர்.

கொழும்பு றெட்ஸ் கோஷ்டிக்கும், கண்டி வைற்ஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மேற்பிரிவுப் போட்டியில் கண்டி வைற்ஸ் 2-0 கோலால் கொழும்புக் கோஷ்டியை வென்றது. இப்போட்டியில் கண்டி வீரர்களின் ஆட்டம் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இடைவேளை வரைக்கும் கடுமையாகப் போட்டியிட்ட கொழும்பு வீரர்கள் இடைவேளைக்குப் பின்னர் 'போர்' அடிக்கத் தொடங்கினர். சந்தர்ப்பத்தை பயன்படுத்திய கண்டி வீரர்கள் அடுத்தடுத்து இரு கோல்களை மின்னல் வேகத்தில் விளாசினர். இவ்விரு கோல்களையும் கண்டியின் சிறந்த முன்னணி வீரரான ஆர். ஞானரெட்னம் பெற்றிருந்தார். யாழ்ப்பாணக் கோஷ்டிக்கும், கண்டி புளூஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கீழ்ப்பிரிவுப் போட்டியில் கண்டிக் கோஷ்டி 2-1

(6-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன் சுன்னுகம் கோட்டைக்காடு பொன். கந்தையா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி உடுவில் வட்டாரக் கல்வி ஆலோசகர் திரு. எஸ். ராசா தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவதுடன் கல்வியிலும் கவனஞ் செலுத்தி சிறந்தகல்விமான்களாக வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். தலைமை ஆசிரியர் திரு. எஸ். சொக்கலிங்கமும் பேசினர். மல்லாகம் ஆங்கில பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர் திரு. எஸ். தம்பித்துரை விளையாட்டுக்களை நடாத்தி வைத்தார். இவ்விளையாட்டுப் போட்டி நீலம், மஞ்சள், பச்சை, ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்றது.

நீல இல்லம் 1வதாகவும் மஞ்சள் இல்லம் 2வதாகவும் பச்சைஇல்லம் 3வதாகவும் வந்தன விளையாட்டு போட்டிக்குசுன்னுகம் பொலிசார் சமூகமளித்திருந்தனர்.

## வடமராட்சியில் நவீன விளையாட்டிடம்

புன்னாலைக்கட்டுவன், புதன் வடமாநில விளையாட்டுப் பரிசோதகர் திரு. எஸ். ஜேசுதாசன் உரும்பராய்ப் பகுதியிலுள்ள பல விளையாட்டுக் கழகங்களையும் பார்வையிட்ட பின் உரும்பராய் விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு நவீன விளையாட்டுக் கழகம் அமைத்துக் கொடுப்பதாகக் கூறினர்.

## விளையாட்டுக்கழகம் உதயமாகும்

உடுப்பிட்டி, புதன் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஏ. வி. விசுவநாதன் வடமராட்சியில்ஓர் விளையாட்டுக்கழகத்தை நிறுவிவடமராட்சி இளைஞர்களைச்சிறந்த விளையாட்டு வீரர்களாகப் பயிற்சியளிப்பதற்கு திட்டமிட்டு வருவதாகத் தெரிய வருகிறது. வடமராட்சியிலுள்ள சகல விளையாட்டுச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் வாசிகசாலைகள், கல்லூரிகள் அங்கம் வகிக்கும் இவ்வடமராட்சி விளையாட்டுக்கழகம் வெகு விரைவில் செயல் பட ஆரம்பிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கான சகல ஒழுங்குகளையும் வடமராட்சிப் பாடசாலைகள் உடற் பயிற்சி போதனசிரியர் திரு. கே. கார்த்திகேசு தீவிரமாகச் செய்து வருகிறார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 10-8-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பநிகழ்ச்சி.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்தநிலை வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு — எம். வைரமுத்து, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாள [illegible] 8-00 [illegible] நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — லீலா துரைசிங்கம்.

## தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கொன்கிறீற் வீடுகள்

எமது ஸ்தாபனம் மூன்று விதமான பிற்காட்டும் விபரமுள்ள வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. விபரம்: 1. நடுத்தரமான வீடு [மூன்று அறைகள்] விலை ரூ. 5200/-. 2. குறைந்த வருமான வீடு [இரண்டு அறைகள்] விலை ரூபா 3465/-. 3. ஆகக் குறைந்த வருமான வீடு [ஒரு அறை] விலை ரூ 2520/-. இவ்வித வீடுகளைக் கட்டுவிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பிப் பதிவு செய்து கொள்க. இவை சம்பந்தமான விபரங்களுக்கு எமது ஸ்தாபனத்திற்கு எழுதியறிந்து கொள்ளலாம். விலாசம்: Artisans Ltd. P.O. Box 182, கொழும்பு. 52

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00, 9-45
Rosana — Podesta
HELON OF TROY

நியூ காலிங்கன்
[illegible]
தினசரி 6-30 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா நடித்த
நீ

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-30
N.T. ராமராவ், ஜமுனா, விஜயலட்சுமி முதலியோர் நடித்த
பெண் நினைத்தால்

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m. 9-45 p. m.
Yul Brynner in
Invitation to A Gunfighter

3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [வெள்ளவத்தை]
ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
டி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

வீடும், வளவும்

14 பரப்பு வீடும் வளவும் சகல வசதியும்கொண்டது. சேச் றேட், சங்கானை. விபரங்களுக்கு S. செல்லத்துரை, 'குபேரபுரி வாசம்', உடுவில் றேட், மானிப்பாய். 2478

காணி:

திருக்கேதீசுவரத்தில், அம்மன் சன்னதித் தெருவில், பாலாவியின் மேற்குக் கரையில் குடியிருப்பதற்கும், பயிர் செய்வதற்கும் ஏற்றதாக ஐந்து ஏக்கர் நிலம் விற்பனைக்கு இருக்கிறது. க. வை. ஆ. சர்மா, 9/2, ஐயனார் கோவில் தெரு. வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்க. 2483

**வாடகைக்கு**

வீடு:

மருதனமடச் சந்தியிலிருந்து உடுவிலுக்குப் போகும் வீதியில் 200 யார் தூரத்தில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு மின்சார, நீர் வசதியுடன் வாடகைக்கு விடப்படும். தேவையானேர் நேரில் தொடர்பு கொள்ளவும். C. S. சின்னத்துரை, உடுவில், சுன்னுகம். 2482

வீடு:

K. K. S. றேட் தாவடிச் சந்திக்கருகாமையில் சகல வசதியும் பொருந்திய வீடு வாடகைக்கு உண்டு. ஆ. நடராசா, தாவடி, கொக்குவில். 2521

## விளையாட்டு மைதானம்: அமைச்சு உதவி

அராலி, புதன் சென்ற அரை நூற்றுண்டு காலமாக அராலி தெற்கு வாலிபர்கள் தனியார் ஒருவருக்குச் சொந்தமான ஒரு வெளி நிலத்தை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். நிலச் சொந்தக்காரர் இந்நிலத்தை குடியிருப்பவர்கள் வீடு கட்டுவதற்காக விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அறிந்த அராலி தெற்கு சனசமூகநிலையத்தினர் இது குறித்து தேசிய சேவை அமைச்சுக்கு மகஜர் ஒன்று அனுப்பியதன் விளைவாக நிலத்தை கொள்வனவு செய்து விளையாட்டு மைதானமாக்க தேசிய சேவை அமைச்சு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

## விளையாட்டு வீரர்கள்

யாழ்ப்பாணம், வியாழன் கைதடி குருடர் செவிடர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மஞ்சள் இல்லம் முதலாவதாகவும், சிவப்பு இல்லம் இரண்டாவதாகவும், பச்சை இல்லம் மூன்றுவதாகவும் வந்தன. சிறந்த விளையாட்டு வீரர்களாகக் கீழ்ப்பிரிவில் கா. ஜெயகுமாரும், செ. இரஞ்சிதமணியும், மத்திய பிரிவில் வி. கந்தசாமியும், புகாரியும், மேற்பிரிவில் கருன், அம்பிகாவதி ஆகியோரும், அதி மேற்பிரிவில் இராசேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நியமனம்

கொழும்பு, புதன் அட்வகேட் திரு. ஆர். யோகராஜா இ. போ. ச. வின் நிர்வாகிகளுள் ஒருவராக தேசியசேவை அமைச்சரினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசாங்கத்துக்கு திடீர் சோதனை

## லோகசபையில் பரபரப்பு

புதுடில்லி, ஆக. 8

இன்று இந்திய அரசாங்கத்துக்கு திடீர் சோதனை ஒன்று ஏற்பட்டது. அதனல் லோகசபையில் சுமார் ஒரு மணிநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

ஷெட்யூல்ட் வகுப்பினர் சம்பந்தமான அரசாங்கப் பிரேரணையொன்று சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அதன் மீது எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்த திருத்தப் பிரேரணை 2 வாக்கு வித்தியாசத்தில் நிறைவேறியது.

ஷெட்யூல்ட் வகுப்பினர் சம்பந்தமாக அரசியல் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள உத்தரவாதம் நடைமுறையில் கடைபிடிக்கப்படுவதில்லையென்று எதிர்க்கட்சியின் திருத்தம் கூறியது.

இத்திருத்தப் பிரேரணை 91—89 வாக்குகளால் நிறைவேறியதாக உப சபாநாயகர் அறிவித்தார். இதனல் சபையில் பரபரப்பு ஏற்பட்டது. அரசாங்கம் ராஜிநாமா செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கூச்சல் இட்டனர். பின்னர் பிரேரணை திருத்தப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

திருத்தப்பட்ட அரசாங்கப் பிரேரணை 8 வாக்கு வித்யாசத்தால் நிறைவேறியதால் அரசாங்கம் தன்னிலைமையைச் சமாளித்துக்கொண்டது.

தீண்டாமை ஒழிப்பில்

# தமிழ் கட்சிகளுக்குள் வேறுபாடு கிடையாது

## சமாதான மகாநாட்டில் எம். பி.

யாழ்ப்பாணம், புதன்

தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே வேற்றுமை இல்லை. தமிழ்த் தலைவர்கள் இதனை ஆதரிக்கின்றனர். தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளிடையே சாதி ஒழிப்பில் துளி கூட வித்தியாசம் கிடையாது. தேநீர்க்கடைப் பிரவேசம், ஆலயப் பிரவேசம் ஆகியவற்றைத் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் கொடிகாமம் கலவரத்தையொட்டி நடந்த சமாதான மகாநாட்டில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் திரு. வி. என். நவரத்தினம் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் மத்தியில் உயர்வு தாழ்வு அகற்றப்படவேண்டும். எமது கட்சி இதற்காகப் பல வருடகாலமாக உழைத்துவருகிறது. மற்றும் கட்சிகளும் கொள்கையளவிலாவது இதனை ஏற்றுள்ளன. அன்பின் வழியில் நல்லெண்ணத்தைவளர்த்து, அதற்கான சூழ்நிலை ஏற்படும்போது, சாத்வீக முறையில் உயர்வு தாழ்வை ஒழிக்க முன்வரவேண்டும்.

பொதுமக்கள் பொலிசாருடன் ஒத்துழைத்து அமைதியை நிலைநாட்டவேண்டும்.

சாவகச்சேரிக் காரியாதிகாரி திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை கூறியதாவது:-

நிலைமை படிப்படியாகச் சீரடைந்துவரும் என நம்புகின்றேன். உணர்ச்சிவசத்தால் பகுத்தறிவை இழந்து சிலர் குழப்பத்தில் ஈடுபடுகின்றனர். மீண்டும் அமைதியை நிலைநாட்ட எல்லோரும் குறிப்பாக வாலிபர்கள் முன்வரவேண்டும்.

கிராமந்தோறும் ஊர்காவல் படையை ஏற்படுத்த வேண்டும். நிலைமை சீராகும் வரை இவர்கள் குழப்பக்காரர்களைக் கண்காணித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கவேண்டும். நிலைமை சீராகும் வரை சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு இயக்கத்தை நிறுத்திவைத்து, நல்லசூழ்நிலை ஏற்பட்ட பின்னர் அன்பின் வழியில் அதுசெயல்படவேண்டும்.

சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. ஜி. நல்லையா கூறியதாவது: கடந்த பல வருடங்களாக பெரும்பான்மை சமூகத்தவர்கள் மனம்மாறுவார்கள் என எதிர்பார்த்தோம். அரசியல் கட்சித் தலைவர்களை நம்பியிருந்தோம். கடைசியில் நாங்களே இயக்கத்தை நடத்த முன் வந்தோம். இதனல் வடபகுதியில், பல இடங்களில், தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. எங்கள் இயக்கம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பலாத்காரத்தை முற்றிலும் வெறுக்கிறேம். பலாத்காரத்தில் நம்பிக்கையுடைய ஒரு சிலர் குழப்பத்தை விளைவிக்கிருர்கள். எமது சமூகத்தவர்கள் இனிமேல் பலாத்காரத்தில் இறங்க மாட்டார்களென்றும், சாத்விக முறையில் நடந்து கொள்வார்களென்றும், வாக்குறுதியளிக்கிறேன்.

கொடிகாமம் கென்னடி இளைஞர் முன்னேற்ற கழகச் செயலாளர் எம். மோகனதாஸ் கூறியதாவது:

சாதி வித்தியாசம் ஒழிக்கப்படவேண்டுமென்பதை கென்னடி கழகம் ஆதரிக்கின்றது. சமூக முன்னேற்ற அடிப்படைக் கொள்கையில் தான் எங்கள் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சாதி ஒழிப்பு படுப்படியாக நடைபெறவேண்டிய விஷயமாக இருக்கிறது. எங்கள் சந்ததிக்குப் பின்பாவது இப் பகுதியில் ஏற்றத்தாழ்வு ஒழியும் என நம்புகிறேன்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கைதாக வில்லை

ஜாகர்த்தா, ஆக. 8

தாம் கைது செய்யப்பட்டதாக வெளிவந்த செய்திகளை முன்னள் இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் அவுசாஸ்திரோ அமித் ஜோ ஜோ மறுத்தார்.

முன்னள் ஜனதிபதி டாக்டர் சுகர்ணேவை மீண்டும் பதவியில் அமர்த்த சதிசெய்ததாக கைது செய்யப்பட்டார் என்று இந்தோனேஷிய பத்திரிகை ஒன்று முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

## சத்யஜித்றேக்கு பரிசு

புதுடில்லி, ஆக. 9

பிரபல அகில இந்திய டைரக்டர் சத்யஜித்றேக்கு வங்காளி மொழியில் அவர் பத்திரிகைத்துறை இலக்கியத்துறை ஆகியவற்றில் ஆற்றிய சாதனைகளுக்காக 'மக்ஸஸே' பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசின் பெறுமதி சுமார் 40 ஆயிரம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. தங்கப்பதக்கம் ஒன்றும் வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்க்காங்கிரஸ்

# வாலிப முன்னணி மகாநாடு

## நிர்வாகக் குழு தெரிவு

உடுப்பிட்டி, புதன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியின் 22-வது வருடாந்த மகாநாடு எதிர்வரும் 25-ம், 26-ம், 27-ம் திகதிகளில் பருத்தித்துறை திக்கமுலை சிவன்கோவில் மைதானத்தில் அமைக்கப்படும் நாவலர் அரங்கில் நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 25-ந் திகதி ஆரம்பமாகும் முதல் நாள் நிகழ்ச்சியில் காலை 8 மணிக்கு வல்வெட்டித்துறையிலிருந்து தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எம். பி., உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உட்பட கட்சித் தலைவர்கள் அலங்கரிக்கப்பட்ட இயந்திரப் படகுகளில் கடல் மார்க்கமாக பருத்தித்துறை துறைமுகம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் பருத்தித்துறை கிளைத் தலைவர் புரக்டர் திரு. வி. பி. சுந்தரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து புலோலி கிராமக்கோர்ட்டுச் சந்தி வரை சைக்கிள் அணிவகுப்பும் இடம்பெறும்.

இம்மகாநாடு சம்பந்தமான சகல முடிவுகளும் எதிர்வரும் 12-ந் திகதி பருத்தித்துறையில் நடைபெறும் கமிட்டிக் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

மகாநாட்டு நிர்வாகக் குழு விபரம் வருமாமாறு:

தலைவர்: திரு. வி. பி. சுந்தரலிங்கம், உபதலைவர்: திரு. கே. நேசராசா, செயலாளர்: திரு. எம். இரத்தினசோதி, உபசெயலாளர்: திரு. எம். கிருஷ்ணராசா, பொருளாளர்: திரு. கே. சிவகுரு, உப பொருளாளர்: திரு. எஸ். பி. இராஜதுரை.

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி மகாநாட்டையொட்டி விசேட மலரொன்ற வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மாத்தளையும ....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கோல்களால் யாழ்ப்பாணத்தை வென்றது. இப்போட்டியில் இரு கோஷ்டியுமே நன்ருக ஆடின. இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் கண்டி ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் யாழ்ப்பாணக் கோஷ்டியின் முன்னணி வீரரான வை. ஏ. கயூம் ஒரு கோலை முதல் தடவையாகப் போட்டார். இதையடுத்து கண்டியின் முன்னணி வீரரான எம். எஸ். எம். ஜிப்றியும் ஒரு கோல் போட்டார். கடைசி வரைக்கும் யாழ்ப்பாணக் கோஷ்டியினர் விட்டுக் கொடுக்காமல் அருமையாக ஆடினர்.

# மூதூர்க் கடிதம்

நமது நிருபர்

## மூதூரில் தமிழரசு செயற்குழு கூடும்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரின் செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 26, 27-ந் திகதிகளில் மூதூரில் நடக்கவிருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகிறது. உள்ளூர் ஆதரவாளர் ஒருவருக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்குழுக் கூட்டத்தில் முடிந்து விட்ட செனட்டர் விஷயம் பற்றிய பேச்சுகள் முக்கிய இடம்பெறுமெனவும் உள்ளூர் கட்சி ஆதரவாளர்களும அனுதாபிகளும் கட்சித் தலைவர்களிடம் தமது கருத்தைத் தெரிவிப்பாரெனவும் அறியப்படுகிறது.

இதற்கிடையில் முன்னள் செனட்டர் மு.மாணிக்கமும் வேறு சிலரும் திருமலைவரும் சமயம் மூதூருக்கும் வந்து சிலரைச் சந்தித்து தமது இயக்கத்தினை விளக்கிப் பகிரங்கக் கூட்டமொன்றும் அதைத் தொடர்ந்து பலரின் ஆதரவைத் தேடி இயக்கத்தின் கிளையொன்றையும் அமைக்கவிருப்பதாயும் செய்திகள் அடிபடுகின்றன.

## வித்தியாதிபதியை சந்திப்பர்

கல்வி அமைச்சரின் புதிய திட்டத்தின்படி பாடசாலைகள் தரம்பிரித்தலில் ஏற்படும் அபாயம் குறித்து நடவடிக்கையெடுக்கு முகமாக கிளிவெட்டி அரசினர் பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கம் அண்மையில் தலைமை ஆசியர் என். எஸ். ஒப்பிலாமணி தலைமையில கூடியது.

அண்மைக்காலமாக கிளிவெட்டி அரசினர்பாடசாலையில் உண்டாகி வரும் முன்னேற்றம் இதனல் பாதிக்கப்படும் எனவும பட்டினப் பகுதியில் பல கிராமங்களுக்கு மத்தியில் இருக்கும் ஒரே பெரிய பாடசாலை இது தான் என்றும் ஆகவே இதன் தரம் குறைக்கப்படாது இருக்க வேண்டுமென கோரிக்கை விடவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக வித்தியாதிபதியிடம் தூது செல்ல ஒரு தூது கோஷ்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## பாடசாலை மூடப்பட்டது

மூதூரில் தென் பகுதியில் உள்ளதும் கத்தோலிக்கமிஷனரி மார்களால் ஸ்தாபிக்கப்பட்டதுமான மிகப்பழைய பாடசாலையான ஆனைத்தீவு கத்தோலிக்க பாடசாலை மூடப்பட்டுவிட்டது. இதில் கடமையாற்றிய இரு ஆசிரியர்களும் தற்போது பூநகரி அரசினர் பாடசாலைக்குஇட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். ஊரில் உள்ளவர்கள் குடி பெயர்ந்து வேறிடம் சென்றதே பாடசாலை மூடப்படக்காரணம் எனக் கூறப்படுகிறது. இதில் கல்விபயின்று வந்தமாணவர்கள் அயலில் உள்ள பாடசாலைக்குச் செல்கிறுர்கள்.

## போஷாக்கு...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

விசேஷ பயிற்சியில் ஒவ்வொருவருக்கும் நாளாந்தம் 3 ரூபா வீதம் சம்பளம் வழங்கப்படும். கோழி வளர்ப்பு, மிருகவளர்ப்பு, வீட்டுப்பணி ஆகியனபற்றி இங்குபயிற்சிஅளிக்கப்படும்.

[ந. நி.]

# 'பதுக்கல்வியாபாரி நாட்டின் விரோதி'

வவனியா, புதன்

''நாட்டில் அத்தியாவசிய பொருட்கள்கிடைப்பது அரிதாகிவிட்டது. வியாபாரிகளின் கொள்ளைலாப ஆசையே இதற்கெல்லாம காரணம். மற்றும் அரசர்களின் தலையீட்டால்நியாயவிலைக்கு மரக்கறி வகைகள் கிடைப்பதில்லை. இவ்விதநிலை அகற்றப்படவேண்டும்'' என வவனியா கச்சேரியில் விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்துப்பேசிய வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. ஸி. பெரேரா கூறினர். பால் உணவுவகைகள், தீப்பெட்டி போன்ற தட்டுப்பாடான அத்தியாவசிய பொருட்களும் மரக்கறி வகைகளும் இவ்விற்பனை நிலையத்தில் விற்பனைசெய்யப்படும்.

வியாபாரிகளின் பதுக்கலினல் பொதுமக்கள் கஷ்டமடைகின்றனரென்றும், இவ்வித வியாபாரிகளினல் தான் நாட்டுமுன்னேற்றம்தடைப்பட்டுள்ளதாகவும் திரு. பெரேரா கூறினர்.

உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, காரியாதிகாரி திரு. எஸ். பூரணலிங்கம், காரியாலய உதவியாளர் திரு. எஸ். சிவசிதம்பரம் உட்பட பலர் உரையாற்றினர்.

## ஆணையாளர்...

[1-ம்பக்கத்தொடர்ச்சி]

விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: யாழ்ப்பாண மாநகர சபையின் சௌக்கியசேவை ஊழியர்களான மலசுத்தித் தொழிலாளர்கள் வீடு வீடாகச் சென்று தமது கடமையை மேற்கொண்டு வருகையில் சாடையர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். இதனல் உயிருக்குப்பயந்து இருதினங்கள் அவர்கள் வேலைக்குச் செல்லாததால் பொது மக்கள் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறாகள்.

தமது சட்டரீதியான கடமைகளைச் செய்ய விடாது தடுக்கப்படும் தனது ஊழியர்களைப் பாதுகாப்பதற்கும், அதே வேளையில் யாழ் நகர வரியிறுப்பாளர்களுக்கும், பொது மக்களுக்கும் சபை அளித்து வரக்கூடிய மல சுத்திகரிப்பு சேவை எந்தச் சந்தர்ப்பத்திலும் சீர்குலைய விடாது காப்பதற்கும் யாழ்ப்பாண மாநகரசபை தனக்கு உள்ள சகல அதிகாரங்களையும் பாவித்து சட்டமுறையான நடவடிக்கைகளை எடுக்கும்.

அதே வேளையில் யாழ். பொதுமக்களின் நலனுக்கு உழைக்கும் மலசுத்தி ஊழியர் காடையர்களது தாக்குதலுக்குஉள்ளாகாதுபார்க்க வண்டுவதும் தாக்கப்படும் போது அவர்களுக்கு போது காப்பளிக்கவேண்டுவதும், பொதுமக்களாகிய உங்கள் கடமையாகும்.

கடையர்கள் தொல்லை அதிகரிக்குமாளுல்அ அது பற்றி மாநகர அதிகாரிகளிடமும், பொலிசாரிடமும் உடனடியாக முறைப்பாடு செய்யும்படியும், குற்றம் புரிபவர்களை தண்டனைக்குள்ளாக்க எம்முடன் ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொள்கிருேம

## நகரசுத்தி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கோஷ்டியொன்றும்கரையூர் பொலிசாரும் இன்றுமுதல் முக்கிய சந்திகளில் கடமையாற்றுவார்கள். குழப்பத்தை உண்டுபண்ணுவோர் மீதும், கலகத்தை தூண்டிவிடுவோர் மீதும் கடும்நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நகரசுத்தித் தொழிலாளர்கள் பயத்தின் காரணமாக இருதினங்கள் வேலைக்கு வராதபடியினல் வேலைக்கு வராத இருதினங்களுக்கும் சம்பளம் வழங்கப்படுமென்றும். கமிஷனர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org